மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, தருமபுரி.

சிறப்பு மக்கள் நீதிமன்றம்-18.07.2026

(காசோலை மோசடி வழக்குகள் - NI Act Cases)

தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் உத்தரவின்படியும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின்படியும் வருகின்ற **18.07.2026(சனிக்கிழமை)** அன்று சிறப்பு மக்கள் நீதிமன்றம் (காசோலை மோசடி வழக்குகள் - NI Act Cases) நடைபெறஉள்ளது. இதற்கான சிறப்பு அமர்வுகள், நீதிபதிகள் குழு அமைக்கப்பட்டு **ஜூலை 1 முதல் ஜூலை 17** வரை நடக்க உள்ளது. இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றத்தின் நோக்கம் ஆனது மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 படி காசோலை மோசடி (செக் பவுன்ஸ் கேசஸ்) தொடர்பான நிலுவையில் உள்ள வழக்குகளை மக்கள் நீதிமன்றம் மூலம் அன்றைய தினமே விரைவாக தீர்வு காணப்படவுள்ளது, இதுவே இந்த நிகழ்வின் நோக்கமாகும். இதனை முன்னிட்டு தருமபுரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவரும் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி.C.திருமகள் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர்/சார்பு நீதிபதி திருமதி P.K.தமயந்தி மற்றும் விரைவு நீதிமன்ற (Fast Track Court-Magistrial court) நீதிபதி செல்வி.R.தீக்ஷிதாவுடன் இணைந்து **08.07.2026** இன்று காசோலை மோசடி வழக்குகள் - NI Act Cases குறித்த துண்டு பிரசுரங்களை வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே வழங்கி சிறப்பு லோக் அதாலத் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தருமபுரி வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர்

திரு.அழகுமுத்து அவர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு பிரசுரங்கள் பெற்றுக்கொண்டனர்.

பொதுமக்கள் மற்றும் வழக்காடிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, நீதிமன்றங்களில் ஆஜராகி நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள, சமரசம் செய்துகொள்ள கூடிய, மேற்கண்ட பிரிவு வழக்குகளில் சமரசம் செய்து கொண்டு வழக்கினை முடித்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே இப்படிப்பட்ட உன்னதமான வாய்ப்பை வழக்கு தரப்பினர்கள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.